DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER
SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020** அ.சா.1
Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | **வைரவகேசு** | Caste: | |
| Father's Name: | காளியப்பன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2024.

(1 முதல் 8 எதிரிகள் ஆஜர்)

கு,வி.மு.ச பிரிவு 311 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி

முதன்மை விசாரணை

நான் இந்த வழக்கில் கூடுதல் ஆதாரமாக ஒரு பெண்டிரைவ் தாக்கல் செய்துள்ளேன். 18.02.2020 அன்று ஏ1 எதிரி பாலா (எ) பாலமுரளிகிருஷ்ணன் பயன்படுத்திய டிராக்டரும், ஜேசிபியும் அவருக்கு சொந்தமானது அல்ல. அந்த இரு வாகனங்களும் என் மகனை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள். 21.03.2020 அன்று காலை 11.58 மணிக்கு என் மகனுக்கு ஏ3 எதிரி சேதுபதி போன் செய்து என் மகனை எங்கே இருக்கிறாய் என்று கேட்டார். அவர் அன்றைய தினம் காலை 11.58 மணியிலிருந்து இரவு 08.33 மணிவரை போனில் என் மகனிடம் பேசியிருக்கிறார். ஏ3 எதிரி அவ்வாறு என் மகனிடம் பேசிய ஆடியோ என் மகனின் செல்போனில் பதிவாகியிருக்கிறது அதை இந்த பெண்டிரைவில் பதிவு செய்திருக்கிறேன். (பெண்டிரைவில் உள்ள Sethupathi 2020.03.21 11.59.23 என்ற ஆடியோ பைல் கணினி மூலம் ஸ்பீக்கர் உதவியுடன் கேட்கப்பட்டது.) பெண்டிரைவ் **சா.சா.ஆ.1/அ.சா.1.** Sethupathi 2020.03.21 11.59.23 என்கிற ஆடியோ பைல்

**சா.சா.ஆ.2/அ.சா.1.** 21.03.2020 அன்று ஏ 3 எதிரி என் மகனிடம் பேசிய கால் டீட்டைல்ஸ் விவரங்கள் என் மகனின் செல்போனில் பதிவாகியுள்ளது. அதை ஸ்கீரின் ஷாட் எடுத்து தாக்கல் செய்திருக்கிறேன். கால் டீட்டைல்ஸ் அடங்கிய ஸ்கீரின் ஷாட் தாள்கள் –2 **சா.சா.ஆ.3/அ.சா.1**. என் மகன் அரவிந்தனுடைய செல்போன் எண் 6374081939 அது ஜியோ போன் செல் நம்பர். அந்த செல்போனிற்கு 29.02.2020 தேதிமுதல் 25.03.2020 தேதி வரையில் வந்த மற்றும் அதில் இருந்து சென்ற கால் டீட்டைல்ஸ் விவரங்களை தாக்கல் செய்திருக்கிறேன். (இந்த கால் டீட்டைல்ஸ் விவரங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அதிகாரி யாருடைய கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை இல்லாததாலும் இந்த ஆவணத்தை உருவாக்கியவர் இந்த சாட்சி கிடையாது என்பதாலும் இந்த ஆவணம் குறியிடப்படக்கூடாது என ஏ 5 எதிரி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது). என் மகனுடைய செல்போனை தனியார் செல்போன் கடையில் கொடுத்து என் மகனுக்கு எந்தெந்த நம்பரில் போன் வந்திருக்கிறது என்று சொல்லும்படி கேட்டேன் அந்த கடையில் என் மகனின் கால் டீட்டைல்ஸ் விவரங்களை எடுத்துக்கொடுத்தார்கள். அந்த விவரங்களைத்தான் நான் தாக்கல் செய்துள்ளேன். 29.02.2020 தேதி முதல் 25.03.2020 தேதி வரையிலான கால் டீட்டைல்ஸ் விவரங்கள் **சா.சா.ஆ.4/அ.சா.1.**

**ஏ 4 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :– (இல்லை என ஏ 4 எதிரி தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. )**

**5 ஆவது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

என் மகன் எந்த கம்பெனியின் என்ன மாடல் செல்போனை பயன்படுத்தினார் என்று என் முதன்மை விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த விவரங்கள் என் மகனின் செல்போன் மெமரியில் இருந்ததா அல்லது மெமரி கார்டில் இருந்ததா என்று என் முதன்மை விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். செல்போனில் இருந்த விவரம் எந்த

தேதியில் யாரால் எந்த கருவி மூலம் பதிவு செய்யப்பட்டது என்று என் முதன்மை விசாரணையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

**(5 ஆவது எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படியும் பிற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/-S. Uthamaraj,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)